உ

விக்னேச்வர சகாயம்

கருணைக்கடற் கந்தன் றுணை

---

ஸங்கீத ஸாஹித்ய வித்வான்

காந்தம் - விசுவநாத சாஸ்திரிகள்

இயற்றிய

# முருகன் புகழ்ப்பாமாலை

என்னும்

## பக்திரஸ பதங்கள்

(முதற் பாகம்)

கதிர்காமம்

சுவாமி - பாலானந்த சரஸ்வதி அவர்களால்

வெளியிடப்பட்டது.

ஆங்கீரஸ மஹா மகம்

1933

உரிமை பதிவு
செய்யப்பட்டது.

இந்நூலாசிரியரை மூன்று வருட காலமாக நான் அறிவேன். இவர் கதிர்காமத்தைக் கண்டு தொழுதிலராயினும், ஆங்குள்ளவற்றை யெல்லாம் அருள் நோக்கால் நேரே கண்டதுபோலவே இப் புகழ்ப்பாமாலையில் பொறித்துள்ளார். இவர்கள் "**காந்தம்**" என்னும் சீரிய பெயருக்கு உரியராவார்கள். கதிர்காம வேலருக்குச் சாற்றிய இப்பாமாலையை முருகப்பெருமான் அன்பர்கள் யாவரும் பெற்றுப் படித்து இன்புறுவான் திருவருளைச் சிந்திக்கின்றேன்.

இங்ஙனம்:

கதிர்காமம் - சுவாமி பாலானந்த சரஸ்வதி.

# முகவுரை

**பக்தியிற் சிறந்த பெரியீர்! அறிவிற் சிறந்த அன்பர்காள்!**

கருணைக்கடலாய கந்தனும் குமர வடிவேலனின் கழலடிகளின் நிழலடிகளைக் காலந் தவறாது கருதிக் கருதிக் கைதொழு தேத்துவதே மக்களுக்கு உய்வு தரவல்லது. குவலயந் தன்னிற் கண்டது யாதெனின், அன்னவன் பேரருள்தான். அந்தரங்கத்து அன்பு மேலோங்கி அருவிபோலிடைவிடா தாநந்தமாய்ப் பெருக, அவ்வாநந்த வெள்ளமே பதியெனும் பரமனிடம் பசுவெனும் இப்பிராணியைப் பாசமெனும் பக்தியாலிறுக இணைத்திடும். பாவிப்பதற்கன்றி, பேசுதற் கரிய அப்பக்தியின் பெருக்கத்தால் படிப்படியாக இப்பொய்யெனும் மெய்யுடல் புளகங் கொண்டு பரவச மெய்திடும். அச்சமயமே நமக்கிச் சகந்தன்னிலே எச் சுகாசுகங்களையும் இச்சித்திடாது மறக்கச் செய்யும் நற்சமய மாதலால், அவ்வரிய நிலைதனை அன்புடனளித்திடும் ஆறுமுக வள்ளலை, ஆசைமிகப் பெருகி மனமாநந்தமாயுருகி, ஐம்புலன்களையு மவனுக்கின்புட னுபயோகித்து, மெய்யால் வணங்கி, வாயால் புகழ்ந்து, கண்ணாரக் கண்டு அர்ச்சித்த நறுமலர்களை முகர்ந்து, செவிகளால் புகழைக் கேட்டு, அவன்பால் அன்பு செலுத்திச் சதாகாலமும் அவனையே சிந்தித்திருக்கவேண்டும்.

கலியில் சங்கீர்த்தனமே பெரிதும் விரும்பத்தக்கதா யிருக்கும் என்பது பெரியார்களின் துணிபாகையால், முருகன் புகழை மெய்யுருகப் பாடப்பாட மெய்ப்பொருளிதுதானெனத் தோன்றும். பாலருடன் பாலனாகவும், யுவர்களுடன் யுவராகவும், விருத்தருடன் விருத்தராகவும் அவரவர் மனோ பீஷ்டப்படி தரிசனந் தருபவனும், நினைக்குந்தோறும் நினைக்குந்தோறும் நிரதிசயாநந்தப் பெருவாழ்வைத் தந்தருள்பவனும், எதிரிகளை வயப்படுத்தி எடுத்த காரியங்களைக் கைகூட்டுவிப்பவனும், சகலவித சங்கா தோஷங்களையும் பயாரிஷ்டங்களையும் நிவர்த்திப்பவனும், சர்வ மங்களங்களையும் சந்தோஷமா

யளிக்க வல்லவனும், சிவசக்தி தவப்பயனுமான அந்தரங்கத்துக் குகந்த அந்தக் கந்தவேளை வாயாரப் புகழ்ந்து பாடாது, நாவுக்குப் பிறிதோர் செயலுமுண்டோ இப்புவிமீதில்?

அரிய பெரிய கவிமணிகள் கந்தனை வழிபட்டுக் கவிகளும் பாக்களும் அமிதமாய்ச் சாற்றியிருக்க, அறிவு வித்தை பக்தி சத்தி முதலியவைகளிற் சிறியவனாகிய அடியேன் அவனைப் பாட எம்மாத்திரம்? என்றாலும், ஜாதிமத ஸ்திதி வித்தியாச மெதுவுமின்றிப் பெரியோரளிக்கும் பொன்மலராயினும் சிறியோரளிக்குஞ் சிறு தளமாயினும் எதையுஞ் சமமாகவே பாவிக்குந்தன்மை எம்மிறைவனுக்குள தாகையால், அடியேனுந் தைரியமுடன் சில பாக்களெனும் பூக்களை மாலையாகத் தொடுத்து முருகனிடஞ் சமர்ப்பிக்க ஆசை கொண்டனன்.

ஆத்துமார்த்தமாகக் கொண்ட ஆசை மிகுதியால் பாடிய சிறியேன் பாக்களைப் பலர் பல சபைகளிற் பாடவும், மற்ற சங்கீத வித்வான்கள் சிலர் கையாண்டு வரவும் விரும்பினர். இப்பாக்கள் பலருக்கும் எளிதிற் கிடைக்கும்படி புத்தக ரூபமாக்கப்பட வேண்டுமென எனது நண்பர்கள் பலர் கேட்டுக்கொண்டார்கள்.

நான், தென்னிலங்கையில் உன்னதமா யிலங்கும் கதிர்காமக் கந்தனைக் கண்டறிவேனோ, கேட்டறிவேனோ, யாதுமிலன். என்றாலும், சிற்சில சமயங்களில் அடியேன் கதிர்காமம் செல்வதுபோலும் கந்தனைக் காண்பதுபோலும் தூக்கத்திலோ கனவிலோ நினைவிலோ ஏதோ சிற்சில தோற்றங்களைக் கவனித்தவாறு, அவைகளை என் சிறு மதியால் இயன்றவரையில் வரைந்து தன்னந்தனியே இருந்து தனித்துப் பாடுவதைக் கருணாரூபியாகிய கதிர்காமம் ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமி பாலானந்த சரஸ்வதி அவர்கள் அறிந்து, என்னை யழைத்துப் பாடச் செய்து, இப்பாக்களைச் சிறு புத்தகமா யச்சிட்டுக் கொடுக்க இசைந்தார்கள்.

இச்சிறு புத்தகத்திலடங்கிய பாட்டுகளில் சொற்பிழை, பொருட்பிழை, இசைப்பிழை முதலிய பல பிழைகள் காணப்படினும் அவைகளைப் பாராட்டாது, 'முருகப் பிரானின் புகழ்' என்னும் பொருளை மாத்திரம் கைக்கொண்டு அடியேனைப் பல நண்பர்களும் மதித்து

அநுக்ரஹிப்பார்களாக! இச்சிறு புத்தகத்திலடங்கிய பாட்டுகளை என்னிடம் நேரிற் கற்றுக்கொள்ள விருப்பங் கொள்பவர்களுக்கு, யான் அவைகளைப் பயிற்றுவிக்கத் தடையேதுமில்லை. இச்சிறு புத்தகத்தை வெளியிட்ட ஸ்ரீலஸ்ரீ கதிர்காமம் சுவாமி பாலானந்த சரஸ்வதி அவர்களுக்கு என்மனப் பூர்வகமான சாஷ்டாங்க நமஸ்காரங்களை அன்புடனளிக்கிறேன். இதைப் பாடுபவர்க்கும், பாட்டையாதரிப்பவர்க்கும் சர்வ மங்களங்களும் மனோபீஷ்ட சித்திகளுமுண்டாவதாக வெனச் சத்தி வடிவேலவனைச் சந்ததமும் சிந்திக்கிறேன்.

இங்ஙனம்;

சங்கீத வித்வான்,

T. R விசுவநாத சாஸ்திரி.

மதராஸ்.
1—4—1933.



உ

மஹா கணபதி துணை

# முருகன் புகழ்ப்பாமாலை

## விநாயகர் துதி

### நாட்டை - ஆதி

1. ஜயஜய கணநாதா ஜயம் தா (ஜய)

ஜயஜய சுகதா ஜயவினு தபதா
ஜய பார்வதி சுதா பயங்களைந் தருள்தா (ஜய)

எழில்பெறுஞ் சீலா ஏழை பங்காளா
வழிக் கனுகூலா வழங்குந் தயாளா (ஜய)

மோதக கரனே மோக்ஷ ஸாதகனே
ஸாது ஜனப்ரிய சங்கரி சுதனே (ஜய)

விஜய ஸ்வரூபா விகட ப்ரதாபா
வர்ஜித பாபா விச்வகுண தீபா (ஜய)

## விநாயகர்

### உசேனி - ரூபகம்

2. காத்தாள்வாய் கஜமுகனே
தேவ சுமுகனே (காத்)

பார்த்தாள்வாய் மாஹேசனே
பணிந்தேற்றும் பாலகரைக்
கார்த்திகேயன் சோதரா
கருணையுடன் சீராகக் (காத்)

சந்திரசேகரன் பெற்ற தந்தி விநாயகனே
சுந்தரப் பார்வதியை யன்னைகொண்ட முதலோனே
இந்திராதி தேவர் போற்றும்
விச்வம் புகழ்வக்ர துண்ட (காத்)

## சரஸ்வதி

### கல்யாணி - ஆதி

3. வாணிவந் தருள்வாய்நீ வரமருள (வா)

வாணி ஜகம்புகழ்பு ராணிமல ரணியும்
வேணிஎன் நாவிலன்பு பேணி நித்ய கல்யாணி (வா)

இன்னிசை யிலக்கணம் ஏதுந் தெரிகிலேன்
நின்னிசைந்த கருணை யின்றி வேறறிகிலேன் (வா)

வேதன் சதியே தாயே உந்தன் கமலப்
பாதம் பணிந்தேன்மாயே சரஸ்வதியே
போதங் களித்துவிச்வ கீதங்கள் மதித்துப்ர
சாதம் அளித்து ஆசீர் வாதந் தெளித்தருள (வா)

## திரிமூர்த்திகள் (ஹரிஹர குஹர்)

### அமீர் - ரூபகம்

4. பாரினிற் பரிபாலனஞ் செய்யும்
நாரணனே வா வா (பாரி)

நாரணனே வா பரி பூரணனே வா வா (பாரி)

கேசவா முகுந்த ஹரே
வாசவாதி நுத முராரே
நேசமாய்க் கருணையுடன் ப்ர
காச மளிக்கநீ வா (பாரி)

சங்கரனே சுபகரனே இங்கருள் நீ தா தா
இங்கருள் நீ தா சதா மங்கள தாதா தா (சங்)

மங்கை பார்வதி மணாளா
திங்க ளணியுந் தயாளா
எங்கள் கருணால வாலா
எங்குஞ் சோதிப்ர வாளா (சங்)

குருபர சிவகுமர சுந்தரத் திருமுகனே வா வா
திருமுகனே வா அருள்தருங் குகனே வா வா (குரு)

மருவும் வள்ளியை மணமிடச் சென்ற
மாதவ மருகா வா
முருகா விச்வ மோகன உந்தன்
திருவருள் நீ தா தா. (குரு)

---

## முருகப் பிரான்

### தோடி - ஆதி

5. கா மால் மருக ஷண்முக குக முருகா
மயி லேறிவந் தென்னைக் (கா)

சோமசேகர ஸுதா வரதா—அபயந்
தரும் சுகுண குருபரனே
ஸ்ரீமானே கருணை யொடு குறை தீர்த்து
சுகம் வார்த்து முகம் பார்த்து எனைக் (கா)

பாதார விந்த நிழலெனக் குத்தா—இது தகாதா
என்மேல் வாதா உன்
ஞதாரமதை மிகவும் நம்பியே வந்து
தோதாயுன் சரண்புகு மடிமை யல்லவோ
நீ தாரக பத்மா சுரர்களைக் கொன்று
தீயோர்களை வென்று காத்திலையோ அன்று
ஹே தானவ குலரிபோ விச்வம் புகழ் ப்ரபோ
மகிழ்ந் தென்னை யிப்போ தோடிக் (கா)

### காபி - ஆதி

('மனுமாயா'—மெட்டு)

6. வடிவேலா உந்தனையே நம்பியே வந்த
என்னைநீ கைவிட லாமா
மெடியாய் வள்ளியை மணம் செய்தோனே சுவாமி
மாயோன் மருக சுக தாமா
நாரதன் வார்த்தைசொல் கேட்டுக் கனிகொள்ள
வந்த வேடுவ சுகு மாரா
பக்தர்களைப்பரி சோதிக்க லாமா
நித்தம் பஜிக்கும் விச்வ நாதன்மேல் சற்று
முத்தி யருள்வாய் குக நாதா (வடி)

---

### மால்கோஸ் - தேசாதி

7. சரவணபவ குகனே வா
வரமருள் சிவசுதனே வா வா (சர)

பரம க்ருபா நிதியே பரம்பொருளே
சுரவர பூஜித நின்பத மருளே (சர)

பாத கமலங்களைப் பரிந்தடுத்தேனே
காதலும் மிடங்கொண்டு ளேனுண்மை தானே
நாத முதித விச்வ நாதன் துதியை நானே
ஓத முருக ஆசிர் வாத மளிக்கக் கோனே (சர)

---

### காம்போஜி - ஆதி

8. வருகிறாரோ பார்த்துவா சகியே
மேன் மேலும் என்னை நாடி (வரு)

தருணமிதென் றெண்ணிப் பச்சை மயிலேறிப்
பாடியே நாடியே ஜோடியாய்க் கூடிட (வரு)

காலங் தவறாது கைதொழு தேத்தியே
சாலவு மன்புடன் ஸ்வாமியைப் போற்றிடும்

பாலே யபலேயைச் சோதிப்பதே னேடி
மாலே யிவ்வேளேயில் மருவியேசுகந் தருகிறேனென (வ)

கானக மென்றாலுங் காத்திருந்த பெண்ணேப்
பார்த்துவரே னென்று ஓடியே சென்றவர்
மானவள் கண்விழி கண்டு மயங்கியே
நின்ருரோ பாரடி சுந்தர சுகுமார கந்தன் (வ)

காதல் கொண்டவரைக் கைவிட லாகுமா
பாதக மென்றவர் அறிந்திடா ரோடி
பாதங்களேக் கண்டு பூஜித்திடும் விச்வ
நாதனுக்கருள் செய்திட வந்த முருகேசனிங்கு (வ)

---

## வடபழனியாண்டவர்

**ஜோன்புரி - ரூபகம் (திர்ச்ரகதி)**

('பண்டித மோதிலால்நேரை'—மெட்டு)

9. வடபழனியில் வாழும் வேல் முருகோனே
வேல் முருகோனே திரு மால்மருகோனே (வட)
திடமேவுஞ் சந்நிதியில் சுடர்போலுன் சோதிகண்டேன்
படபடத்தென் மனமுமீறி யுடல் சிலிர்க்குதே (வட)

(தொகையரு)

கண்டார்தம் கலிதீர்க்கவொரு கங்கண மணிந்திடும்
காருண்ய மூர்த்தியே
கண்டாமணி யோசையிரு காதுகளி லோதுதே
கண்யமாயுன் கீர்த்தியே—கீர்த்தியே
தொண்டா லுயர்பதவியுறும் பக்தகோடிகள் உனைத்
தரிசித்திடும் நேர்த்தியே
வண்டாடு மலர்மாலே வெண்டோளி லுறவாடி [தியே
வார்க்குதே விச்வமெங்கும் மனப் பூர்த்தியே—பூர்த்
அண்டாதி தேவர்களும்
கொண்டாடிப் பூஜித்திடும்
தண்டாயுத பாணியேயுனேக்
கண்டாற் போதுமே (வட)

## கதிர்காமக் கந்தன்

### சங்கராபரணம் - ஆதி

('பிராணநாத பிரான'—மெட்டு)

10. வரந்தந் தருள்வாய் வள்ளீ மணாளா (வர)

பரமார்த் தப்பரம் பொருணீ என்றேஎன்
சிரமுந்தன் திருவடி சேர்த்தே னின்றே (வர)

பதியே உனைநான் புகழ்பாடவே நன்
மதியே எனக்கி சைந்தருள் செய்வாய்
கதியே துமில்லேன் கதிர்காம தேவே
நிதியே என்நாவில் நின் றின்னிசை கூட (வர)

பாடிப் பாடிமனஞ் சலிப்படை யாது
நாடி நாடிமனோ வசங்கிடை யாது
தேடித் தேடி உன்னைக் காணமுடி யாது
வாடி வாழ்த்தும் விச்வம் பாடத்தடை யேது (வர)

---

### ஹேமவதி - ரூபகம்

11. சிவனுக்கிளைய சேயே செவ்வேள்
சிலம்பனே நீ வா வா வா (சிவ)

குவலயத்திற் கொண்டாடுஞ் சீர் கதிர்
காமக் கந்தனே உயர்
சேமந் தந்தெனை யருளிட (சிவ)

காணக் கிடைக்காத கோனே—கலை
வாணர் புகழும்ஸ்ரீ மானே—இனி
வீணாயப் போகாமல் நானே—யன்பு
பூணவுனை வேண்டு றேனே—ஹே (சிவ)

நாதப்ரஸ் தாரமும் நீயே—நான்கு
வேதத்தின் ஸாரமும் நீயே—ஆத்ம
போத ஓங்காரமும் நீயே—விச்வ
கீதாலங் காரமும் நீயே—ஹே (சிவ )

---

### சங்கராபரணம் - ஆதி

12. காந்தமிழுக்கு தேகாண்—கதிர்காமக் (காந்த)

கந்தனிட மெந்தனையே
காந்தனிடஞ் சிந்தைதனைக் (காந்த)

எந்நாளிந் தப்புவியி லென்னாவி பிறந்ததோ
அந்நாளே சுகந்தரும் நன்னாளெனக் கருதி
சின்னாள் முதலாயவர்க் கென்னா யுளேவளார்த்தே
னிந்நாளே யருள்புரிந் தென்னாதன் காத்தருளக் (காந்த)

### ஸாரங்க் (இந்துஸ்தான்) - ஆதி

13. கதிர்காம தேவா கந்தனே வா வா (கதிர்)

கதி புரிந்தென் மனத்துள்
ளுதித்திடும் ஜீவா வா (கதிர்)

சந்நிதி வந்துநா னடைவதெக் காலம்
நின்னித யங்குளிர்ந் திடில்நல்ல காலம்
கன்னி வள்ளியைக்கை பிடிக்கநீ ஜாலம்
உன்னியதைப் போல்நான் தாளமாட்டேன் கோலம் (க)

எளியோரைக் காத்திடும் ஏழைபங் காளா
ஒளிமிக வீசிடும் வள்ளி மணாளா
துளியள வேனும்நீ யருள்செய் தயாளா
களிமிக வளித்திடும் கருணால வாலா (கதிர்)

பாத தரிசனம் கிடைக்குமோ தேவா
மாதவ மருகவெம் மஹானு பாவா
நாதசங் கீதத்தில் நாடும் சுபாவா
கீதமியற்றி விச்வம் மகிழ்ந்திட வாவா (கதிர்)

**சிந்து பைரவி - ஆதி**

14. காந்தமாம் கதிர்காமந் தன்னிலோர்
வேதாந்தமாம் (காந்த)

சாந்தமாகி மனங்குவிந்து ஏ
காந்த மோன நிலை யளித்திடும் (காந்த)

சுதி லயமுடன் துதிசெய்யு மவர்க்
கதி துரிதமாய்க் கதி யளித்திடும் (காந்த)

நாவினில் ருசியே நவின்றிடத்
தீருது பசியே அது
பேரின்ப ருசியே பார்க்கக்
கிடைத்தோர் தபசியே—

ஆண்டவ னடி சேரச் சேர
அன்பு பெருகுது ஏற ஏற
கதிர் காமமென்று கூறக் கூறக்
கவலைக ளடியோடு தீரச்

செய்யுமாம் கருணை மாரி
பெய்யு மாம் களித்திடக் கதி
உய்யு மாம் கண்டாலிது நல்வ
கையுமாம் திரு முருக ரூபக் (காந்த)

மனமடங் காது மன்னவனை
நினைத்திடும் போது தின
மவனை யல்லாது கதி
வேறெனக் கேது?

வேலவன் புகழ் பாடப் பாட
வேகமாய் மனம் நாட நாடச்
சீலனை யுட்கொண் டாட ஆடச்
சேவடிகளைத் தேடத் தேடத்

தோணுமாம் திவ்விய ஜோதி
காணுமாம் தெளிந்தா லன்பு
பூணுமாம் தரிசிக்க பாக்யம்
வேணுமாம் வடிவேலவ னென்ற (காந்த)

சந்தமு மறியேன் புகழப்பெ
ருந்தமி ழறியேன் நான்
பந்தியிற் சிறியேன் பால
கந்தனுக் கடியேன்

கதிர் காமவழி மெல்ல மெல்லக்
கடுகி நடந்து செல்லச் செல்ல
எதிர்ப் புலன்களை வெல்ல வெல்ல
எடுத் துரைப்பதே நல்ல நல்ல

நேரமாம் நிகரற்றகுண
சாரமாம் விரித்துரைக்கஅ
பாரமாம் விச்வந்தனக்குப
காரமாம் வரமருளுந் திவ்வியக் (காந்த)

---

செஞ்சுருட்டி (இந்துஸ்தான்) - ரூபகம்

15. ஆறுமுகம் ஒரு சாமி நம்மை
யாதரிக்கும் கந்த சாமி அவன்
ஊருமுயர் புண்ய பூமி சொல்லப்
பேரும்புகழ் கதிர் காமி என்று

தெரிந்தே யன்பு சொரிந்தே—மனம்
செறிந்தே யுண்மை யறிந்தே—பல
தேவர்களும் மூவர்களும் யாவர்களும் சேவைபெற
தினம் மனங் குவிந்தவன் தரி
சனம் பெறும் படியருளிய (ஆறு)

ஊரைச் சுற்றியொரு கங்கை அதன்
பேரைச் சொன்னாற் போகும் சங்கை அங்கு
யாரைப் பார்த்தாலுஞ் சிரம் கை கூப்பித்
தாரையாய்க் கண்ணீர் சலங்கை மிக

விடுத்தே புலன் தடுத்தே உள்ளங்
கொடுத்தே பக்தி தொடுத்தே உயர்
பேரின்பம திற்பெருகியே சேரும்படி சிவசுதனடி

நாடி யாடிக் காவடி கொண்
டாடி யோடிக் கூடிட வருள் (ஆறு)

வெள்ளரசு ஒன்றிலங்கும் காணக்
கள்ளர் மனமுங் கலங்கும் திவ்யத்
தெள்ளமுதி னூற லங்கும் மனத்
துள்ளே கசிந்து துலங்கும் அதைக்

குடித்தே கண்ணீர் வடித்தே அன்பு
துடித்தே புகழ் படித்தே வடி
வேலவனைச் சீலமுடன் சாலவுமன் பாலணுகிட
அருளதுதர விச்வம்பர
மருகன்திரு முருகன் வர (ஆறு)

---

**சிந்து பைரவி - ஆதி**

16. உள்ளத் தினிதினிக்கும் தெள்ளமுதே செவ்வேள்
சேவலனே கதிர் காவலனே
மெள்ளவந் தென்மனம் கொள்ளையிட் டாட்கொண்ட
வள்ளிமணாளனே வா வடிவேல்
புள்ளிமயி லோனே வா (உள்)

எத்தனை பாக்கியம் இருந்தென்ன சிலாக்கியம்
சித்தத்தில் வேணுமே ஞான வைராக்கியம்
உத்தமனே உனைக்காணச் சித்தநிலை நிறுத்தினேன்
சக்திவடி வேலனேவா—சிறந்து என்முன்
அத்தி முகர்க்கிளை யோனே வா (உள்)

மறை பொருளாய் வளர் மாமணியே திரை
மறைத் திடுதே உள்ளம் நிறைத் திடுதே
கரை தெரியாமலே கலங்கிடு மென்மனக்
குறைகளை யோட்டிடவா—கருணையோடென்
முறைகளைக் கேட்டிடவா (உள்)

கங்கை யுனைச்சுற்றி யோடுதே வேகம்
அங்கதின் வெள்ளமே பக்திப் பிரவாகம்
அங்க முழுதுங்கொண் டேனுந் தன்மோகம்
இங்கருள் புரியநீ வா—இனியவள்ளி
மங்கை மணாளனே வா (உள்)

நாத மொலிக்குதே நான்கு பிராகாரம்
நாதத் துள்ளிருப்பது வேதத்தின் ஸாரம்
வேதத்தின் ஸாரமே விளங்கு மோங்காரம்
நாத ஓங்காரம் நீயே—விச்வஞ்செழிக்க
ஆதர வருள்வாயே. (உள்)

---

உசேனி - ரூபகம்

('தில்லையம்பல'—மெட்டு)

17. காந்த மென்றொரு கனியிருக்குதாம்
கதிர் காமந் தன்னில் ஏ
காந்த மாய்நின் றருள் சுரக்குதாம். க

கங்கை யதனைச் சுற்றியோடுதாம்
அதி லமிழ்ந்த பேர்க்குச்
சங்கை விலகிச் சிந்தை கூடுதாம். உ

வெள்ளரசு ஒன்று விரிந்து தெரியுதாம்
வள்ளி நாத னருகில்
கள்ளர் மனமுங் கலங்கி யுருகுதாம். ௩

அந்தரங் கத்துக் குகந்த தெய்வமாம்
அதைக் காட்டவே திரை
யந்தரத் தின்பின் னிலங்குஞ் சைவமாம். ௪

உள்ளும் புறமும் வெள்ளை யாகுதாம்
வெளி ராய் விபூதி
அள்ளிக் குளித்தில் வினைகள் போகுதாம். ரு

பக்தி மிகுந்து பணியுங் கூட்டமாம்
புல னொடுங்கியே மனம்
சக்தி வேலன் மீதில் நாட்டமாம். சு

எவரெவர் களுக் கெவ்விதம் தோணுமோ
அவ்வவ் விதமே ரூபம்
அவரவர் களுக் கிசைந்து காணுமாம். எ

அங்குசெல்ல அவனருளும் வேணுமாம்
புலி சிங்கம் விலகி
எங்கும் வழியில் துணையாய்த் தோணுமாம். அ

வரமருளும் வடிவேல நாதனும்
விச்வம் பணிந்திடுந் திருச்
சரவணபவன் சீர்ப் பாதனும். கூ

---

## மயில் பாட்டு

### சாமா - ஆதி

18. ஆடு மயிலே கூத் தாடு மயிலே அந்த
கதிர் காமக் கந்தனைக்கூத் தாடு மயிலே

அருகினில் நின்று அருள் புரியுங்குகன்
அருமையா யந்தரங்கத் திருக்குங் குகன்
கருவிழி வள்ளிமானுக் குகந்தகுகன்—கந்தன்
திருவடி தாங்கிநின்று ஆடு மயிலே க

(ஆடுமயிலே)

மனமது கனிந்திடில் மருவுங் குகன்
கனவிலுங் கண்சிமிட்டிக் காக்குங் குகன்
தனதெனத் தான்பரிந்து பேசுங் குகன்—தின
தினமவனைப் பணிந்து ஆடுமயிலே உ

(ஆடுமயிலே)

பாலரோடு விளையாடும் பாலமுருகன்
வாலப்பருவ மங்கையின் துணைமுருகன்

சீலரான பெரியோரைச் சேருமுருகன்
கோலமயிலே! உனக்குகந்த முருகன்—என்று ௩

(ஆடுமயிலே)

அந்தமுருகன் சுகந்த கந்தமுருகன்
சுந்தரமாய் வந்துகளி தந்தமுருகன்
சொந்தமுருகன் சிவன் தந்தமுருகன்—பவ
பந்தங்களைத் தீர்த்திடுவா னந்தமுருகன்—என்று ௪

(ஆடுமயிலே)

கஷ்டங்களைப் போக்கிநம்மைக் காக்குமுருகன்
அஷ்டதரித் திரங்களைப் போக்குமுருகன்
துஷ்டர்களைக் கண்டித்துச் சீர்திருத்துங்குகன்—அவ
னிஷ்டப்படி பக்கத்தேநின் றாடுமயிலே ௫

(ஆடுமயிலே)

துக்கசமயத் திலதைத் தீர்க்குமுருகன்—நாம்
மிக்கக் களிப்பெய்தி லதைப்பெருக்குங் குகன்
தக்கபடி யெக்கணமுந் தோன்று முருகன்—அவன்
பக்கமதில் நின்றுகளித் தாடுமயிலே ௬

(ஆடுமயிலே)

துள்ளித்துள்ளி விளையாடும் பாலமுருகன்
அள்ளிஅள்ளி யருள்தருஞ் சீலமுருகன்
வள்ளியின் கரம்பிடித்த வேலன் முருகன்
புள்ளிமயிலே உனக்குகந்தமுருகன்—என்று ௭

(ஆடுமயிலே)

ஆறுபடை வீடுகளில் வாழும் முருகன்
ஆறுமுகங் கொண்டசர வணமுருகன்
கூறுமடி யார்கள்குறை தீர்க்கு முருகன்—அவ
னேறு மயிலே! மகிழ்ந்து ஆடுமயிலே ௮

(ஆடுமயிலே)

வேதனுக்கும் வழிகாட்டும் வேலன் முருகன்—திரு
மாதவனுக்கு மருகன் சீலன் முருகன்
காதல்கொண்ட வடியாரைக் காக்கும் முருகன்—விச்வ
நாதன் மனம் நாடும்புக ழேற்கும் முருகன்—என்று

(ஆடுமயிலே) கூ

---

தேசிக தோடி - ஆதி

('தாதாபாய் நௌரோஜி'—மெட்டு)

19. மாமயில் வீரா மஹாமயில் வீரா
காமாரிபெற்ற கதிர்காமக் கந்தனே (மாமயில்)

எந்தனைநீ காத்திடவே உந்தன்மன மேறலையோ
வந்தேன் உனக்குத் தந்தேன் அருளை
யென்றே எனது சிந்தை மகிழ (மாமயில்)

காலங் கலியென்றே யிப்புவிமீதிற் றோன்றலையோ
அல்லால்—இந்
ஞாலந் தனிலுந்தன் கோலமயில் இறங்கலையோ
சீலா சிவன் மகிழும் பாலா குமாரா—வடி
வேலா வள்ளி லோலா—அனு
கூலா கோ லாகல (மாமயில்)

எத்தனையோ கோடியவர்க் குனதருளைத் தந்திலையோ
உத்தமனே ஜகந்நாதா இவ்விச்வ மெங்கும் வந்திலையோ
சித்தம் இறங்கலையோ சத்வகுண பூரணனே
பித்தனிடத் துதித் தத்தனை வித்தையைப்
பித்தனிடத் தேபோ தித்த சுத்த வீர (மாமயில்)

---

கன்னட (இந்துஸ்தான்) ஆதி

"ஆவினன் குடி"—மெட்டு

20. மாமயிலேறி நீவா மஹானுபாவா (மா)
தாமத மேனே திருப்புகழ்த் தேனே
ச்யாமளன் தன் மருகோனே எந்தன் ஸ்ரீமானே (மா)

கதியெனக் கேது புவியிதன் மீது
பதியே நின்னையல்லாது புகலிப் போது (மா)

சுந்தர ரூப சுக்ருத சல்லாபா
செந்தமிழ்ப் புகழ்ப் பிரதாபா சத்ய ஸ்வரூபா (மா)

குருவர நாதா குமரசீர்ப் பாதா
வரமருள் வள்ளி நாதா விச்வ விநோதா

மாமயிலேறி—அழகாய்
மயிலேறி—பச்சைமா
மயிலேறி நீவா—மஹானுபாவா (மா)

---

**யமுன் - ஆதி**

**21.** திருவடித் தாமரைத் தரிசனங் கண்டார்க்கு
மறுபிறப் பொன்றுமில்லை
மால்மருகனாங் குருகுஹன் (திரு)

அருளுருவாகி யமர்ந்து மகிழ்ந்து மெய்ப்
பொருளிது தானென்று குறித்திடுங் கதிர்வேல் (திரு)

எங்கும் நிறைந்தது ஈசனே நின்னுரு
இங்கதற் கெதிர்ச் சொல்லில்லையே—வேறு
பொங்குங் கருணையால் வாரியருள் தரு
மங்களரூப ஸ்ரீ சங்கரசுதன் குரு (திரு)

பார்க்கப் பார்க்கமிக பக்திப் பிரவாகம்
பெருகுதே தன்வசம் மீறுதே தேகம்
சேர்க்கச் சேர்க்கமனம் காணுதோர் வேகம்
செருக் கடையாதிருந் தாலே உற்சாகம். (திரு)

---

**தோடி - ஆதி**

**22.** கந்தா குமரா முருகா—குருபரசு
கந்தா குமரா முருகா
சுந்தரதீரா சுகுண வொய்யாரா
வந்தி தாமரா வரமருள் தயாபரா

சிட்டைஸ்வர ஸாஹித்யம்

ஸா, ஸநிதப மகரிஸ ரிநி
ஸா ரஸதள நயனனே முரு
ஸா, த நிஸரிகம கமதநி
கா சு கந்தருஞ்சர வணபவ

ஸா கரிஸநி தாநிஸநித பாதநிதப
ஸா ரசரித தாமதமினி பாரினில்சகி
மகமா நிதபத மபதநி
யேனே நிஜபத வரதனே

பதநி நிதப மபத தபம கமபத
கருணை பொழிய இதுசமயமென் றுனதிரு
நிதபம கரிஸரி கமபத நீ
சரணக மலங்களைச் சிரம்வகித் தேன்

தநித நிஸரி ஸரி காமக ரிஸ்நிதநி
பரம புனித விச்வ நாதனே மயின்மீதேறி
கரிஸநித ரிஸநிதம கமபதநி
வருமுருக பரமனருள் சரவணனே (கந்தா)

ஆடி அனவரதம் பாடி உந்தன்புகழைக்
கோடி கோடியாய் வார்த்தையாடி மகிழ்ந்துமனம்
வாடி உன்தரிசனம் தேடித் திகைத்துப்பறந்
தோடி வந்தேன் கருணை நாடிக் காருமையனே.
(ஸா—கந்தா)

---

### பைரவி - ஆதி

23. சரவண பவகுகனே ஸ்ரீ ஷண்முகனே (சர)
பரம தயாகர பக்த மனோஹர
வரமருள் சுபகரவி நாயக சோதர (சர)

சிட்டைஸ்வர ஸாஹித்யம்

ஸா, ஸநி தப மகரிஸ ரிக
ஸா மி நீ அறியா தது

ஸா, கரிஸநி தபம பதநி
வோ கரி வதனனுக்கு இளைய

ஸா ரிகரிஸ தாநிரிஸநி பாதநிபம
ஸாமி உன்னிரு தாளிலுஞ்சிரம்—சேர்த்தணிபவர்
கரிஸா நிஸரிக மபதநி
களுக்கே நிஜசுக மளித்திடும்

ஸாநித பமகரி ஸரிகம பதமப
காமித வரதனே உனைத்துதிக் கத்துதிக்கக்
காரி கமபதப மபதநி ஸரிகரி
காய மிகவும்பர வசமுறும் புனிதர்கள்

ஸநிஸ ரிஸரி கம காரி ஸநிதநிஸ
பூமி தனிலே விச்வ நாதன் புகழப்பெறும்
நிகரிக ஸரிநிஸ பதமப மகரிஸ
பேறும்பு கழும்நிஜ பதமடை குவர்சிவ (சரவண)

பவஸா கரந்தன்னைக் கடக்கவழி தெரியாது
புவனவாழ்வே சாச்வத நிலையென் றுழலும்போது
தவமியன்றோ ராகிலும் தாண்டிட வொண்ணுது
சிவதநயா வுன்றிரு வுளங்குளிர்ந்தா லல்லாது
(ஸா—சரவண)

---

## உயிர்வர்க்க மாலிகா

### மோஹனம் - ஏகம் கண்டஜாதி

24. அகிலஜக தாநந்த கரமுருக வீசா
ஆறுதலை யோடிங்கு ஆற்றலளி நேசா
இருமடியி லிருமங்கை யருடன்விளை யாடும்
ஈராறு கையநின தருளொளியெ னக்கே
உசிதமென பலமுறையு முன்பதம டுத்தேன்
ஊக்கமுட னென்னிதய முனதுமகிழ் வாசம்
எழிலுறம னங்கொண்டு எளியவனெ னைக்கா
ஏரம்ப னுக்கிளைய சோதரகு மாரா

ஐயமற வுனதடிய னெனையாள நேராய்
ஒருநொடியி லுனதுதிரு மயிலேறி வாராய்
ஓங்கார சிங்கார முருகவெனு நாமம்
ஔடத மெனக்கரிய விச்வமிதின் மேலே.

---

## மெய்வர்க்க மாலிகா

### கமாசு - ரூபகம்

25. கதிர்காமக் கந்தனே கதி கருணாநிதி (கதிர்)

பொங்கும்மங் களமிலங்கு மிலங்கையிற்
றங்குங் குருகுஹ னங்கு மிங்கு மெங்குங் (கதிர்)

சித்தஞ் சிறிதுஞ் சிதறச் செய்யாது
சித்தஜன் வைரிசிவ சுதனேயோது
சித்ததன் ரூபத்தைச் சிந்திக்கும் போது
சித்தமதிற் சத்தியமாய்ச்
சித்தி தருஞ் சக்தி ரூப (கதிர்)

குஞ்சரனுக்குஞ் சகோதர னஞ்சியே
தஞ்சமென் றஞ்சலி கெஞ்சிடுஞ் சீவர்கள்
கொஞ்சமுஞ் சஞ்சல மிஞ்சிடாமற் குக
னஞ்சேலென நெஞ்சமதிற்
கொஞ்ச இப்பிர பஞ்சமிதிற் (கதிர்)

அடிக்கடி துர்விடயக் கடலிடைக்
கடிதடைந் திடிபடு முடலர்கள்
படிப்படி விடுபட அவன்றிரு
வடிமுதல்திரு முடிவரைமிகத்
திடமுடன்கண் டடிபிடித்திடக் (கதிர்)

கண்ணாலவனை நாம் காணவொண்ணாது
கண்ணுக்கு மெண்ணுக்கு மங்கே கணக்கேது
எண்ணாத எண்ண மெண்ணினாலும் நேரேது
பண்ணரியப் புண்ய ரூப
கண்ணியசுப் பிரமணியக் (கதிர்)

தித்திக்குந் தேன்முதத்துக்கு மேலேரு
சித்திடுமே தேவதேவன் திருநாமம்
தத்திக் குதித்துக் கூத்தாடு மயில்மீது
தத்தித்தோம் தரிகிடதக
தளாங்குதோ மென நடம்புரி (கதிர்)

நானே உனைநம்பி னேனே துணைவேறில்
லேனே உனைக்கைவி டேனே மனங்கனிந்
தேனே தினையுடன் தேனே புசிப்போனே
தேனே என் மனதுக்கினி
யோனே என இனி வணங்கிடக் (கதிர்)

நாதனும் நெற்றிக்கண் நாதனுக்கும் நல்ல
நாதனும் நான்முகன் பணிந்திடும் குண
நீதனும் நம்பியின் நங்கைக்கு நாதன்வி
நோதன் அருளுத நான்கு
வேதம் பணி நாதன் திருக் (கதிர்)

* * *

### தேசிகதோடி - ஆதி

26. ஐயனே புகழ் மெய்யனே திருத்தணியில்
வாழும் சக்திக் குமரையனே பன்னிருகை முரு (கையா)
துய்யா தாமத மேனே மெய்யாய்க் காத்தருளென்னை
ஐயா முருகையா
பொய்யா மொழிகள்மிக மெய்யாக வாழ்த்திடும்
பையா குமரையா (ஐயனே)
நாதா மலைவாழ்சாமி நாதா உன்னிருதிருப்
பாதார விந்தத் தடைந்தேன்
வாதாடி வள்ளியுடன் சூதாய் மணம்புரிந்து
ஆதார மளித் தோனே (ஐயனே)
வேலா ஜகம்புகழும் சீலா பரமேச்வரி
பாலா தீயோர்க்குக் காலா வள்ளி
லோலா இவ்விச் வந்தன்னை மேலாக்க் காத்திடுவாய்
கோலா அநுகூலா (ஐயனே)

## தர்பார் - ரூபகம் (ஓரடிப்பதம்)

27. அழைத்து வாடி மானே நீ
அருள் புரியப் பன்னிருகை முருகையனை யிங்கு (அ)

தழைத்திடுந் திருத்தணிகை வாசனை
ஈசனை நேசனை அன்பர்விச் வாசனை (அழை)

ஓராறு சிரமும் ஈராறு கரமும்
பேரா தரிக்குந் திறமும்
சீராகவே யன்பர் களைமிகப் பரிவுடன் காத்திடும்
சுத்த தயாள குணமும்
தீரா வினைகளை யுஞ்சகல துரிதங்க
ளையு மகற்றிடும் மனமும்
சூரா! நீயேகதி யென்றியம் பிடுவார்க்
கபய மளித்திடும் நலமும்
மிக்க பலமும் நிச்சஞ்சலமும் நிர்
மலமும் கோலா கலமும் பெற்று
இலங்கும்வீரனை நல்லதீரனை சுகுமாரனை
நல்லு தாரனை பக்த ஸாரனை ச்ருங்
காரனையே மிகவே பணிவாய்

அங்கை குவித்து கசிந்துன
தெங்கை தவித்து முசிந்துவ
ணங்கி மசிந்து நசிந்துள
மிங்கு பொசிந்து யொசிந்ததைக்

கூறாய் மனந் தேறாய்க் கண்ணீர்
ஆறாய்ப் பெருகப் பாராய்—எந்தன்

ஈசன்முரு கேசன்மஹ ராஜன்ஜக தீசன் சுப்ர
காசன் வள்ளி நேசன்மந்த ஹாஸன் உல்லாஸன்—வா

ராரோ கண்பா ராரோ இதங்கூ
றுரோ எனைச்சே ராரோ —முன்பு

தேவர் சிறை மீட்டியருள் புரிந்த திரு
மால்மருக னிடமணுகி இதுசமய

மென்றோதி நின்றாடி இன்றேபு
கன்றேமு யன்றேப ணிந்தந்த

நாதனை ஸ்வாமிநாதனைக் குணாதீதனை மலர்ப்பாதனை
ஏறிலேறும் பசுபதிசுத ஞாறுமுகனை விச்வம்புகழ்ந்திடத்
தேறித்தயை யென்பேரிலே கூர்ந்து
நேரிலேதர் பாரிலே சென்று (அழை)

---

### மோகனம் - ஆதி

28\. சூரஸம் ஹாரவடி வேலா எழில்
தீரா குன்றக் குடிவாழ் சீலா (சூர)

பாராளும் வேந்தர்பணி பார்வதி மகிழ்பாலா
ஈராறு கைய திருமால் மருக வள்ளி லோலா (சூர)

தீன ஜனோத்தார நாதா விச்வ
கானமுதித குஹநாதா (தீன)

வானோர் புகழுந் திருக்கைலம் பதியின் சேயா
தேனைத் தினைமாவுடன் சேர்த்துப் புசித்தநேயா (சூர)

---

### காபி - தேசாதி

29\. சந்ததம் கந்த நாதனைச்
சிந்தனை செய்து பணிவாய்—மனமே (சந்)

மந்தஹாஸ முகச்செந்தூர் நாதனை (சந்த)

நெஞ்சமே நீயினித் துஞ்சுவது மேனோ
தஞ்சமென் றடைந்தே சஞ்சலத்தைத் தீர்க்கச் (சந்த)

பாத சேவைசெய்து பூஜித்திடும் விச்வ
நாதனுக்கருள் செய் வதையறிந்தே (சந்த)

---

### தேசிகதோடி - ரூபகம்

30. வா வா வேல் முருகா குஹ (வா)

தேவா சுரர் நாதனே எனைக்
காவாய் வெகு துரிதமா யிங்கு (வா)

செவ்வேள் சிலம்பனே பெண்ணாசை யால்மிகக்
கேவலமாய்க் குறத்தியைப் பணிந்தவா
எவ்வேளையும் வள்ளிபங்கி லிருப்பவா
இவ்வேளையி லெனதுயிர் நிலைக்
கெவ்வாறினு முதவியருள் செய். (வா)

சேவலனே செந்தூர் வேலவனே சேனைக்
காவலனே கௌரி தவப்பு தல்வனே
நாவலர் போற்றும் ப்ரணவ ஸ்வரூபனே
சிகாவலனே உலகெலாமருள்
கலாவலனே நலமருளிட (வா)

ஆடித்துதி செய்து அன்பு மிகுந்துன்னை
நாடிவந்த என்னைக் காப்பதுன் பாரமா
வேடிக்கையாய் வேடம் பூண்டவா தேசிக
தோடிப்பதம் விச்வநாதன்
பாடிப் பணிவுடன் போற்றிட (வா)

---

### தேசிகதோடி - ரூபகம்

31. ராஜாதி ராஜ தீர கம்பீர
ஒய்யாரா—சுகுமார (ராஜா)

பாச வலைவந்து மூடா தென்னைக்காரு
மீசா—நேச (ராஜா)

ஈசா கணேசன் சகோதர நேசா
முருகேசா—மஹா (ராஜா)

சூரபத்மன் மாளச் செய்தவடி
வேலனே—வள்ளிலோல (ராஜா)

கந்த நாதா உந்தன் திருப்பாதத் தூளியைத் தாராய்-எந்தன்
சுந்தராங்காபவ பந்தங்கள் தீர்த்தென்னைக் காராய்
செந்தூர்வாசா முருகேசா மந்தஹாஸா—என்னை
வந்தாளுவாய் விச்வ நேசா பரமேசா மஹ (ராஜா)

---

சேஞ்சுருட்டி - ஏகம்

32. வள்ளி மணவாளா வந்தருள்வாயே
வரந் தந்தருள்வாயே முருகா (வள்ளி)

புள்ளிமயி லேறிவரும் எந்தன் மனோஹரா
அள்ளிப் பருகுந் தேனே சைவ பராபரா—என்
கவலையைத் தீர்த்திட வல்லையா—இல்லையா
சொல்லையா என் மெய்யா ஏதுய்யா (வள்ளி)

உந்த னிருபாத கமலங்களில்
வந்தனை செய்து வந்தேன் முருகா (உந்)

சுந்தரக் குறவள்ளி குஞ்சரி நேசா
எந்தன் மனோஹரா பக்த விச்வாசா
இந்திரன் போற்றிடுஞ் செந்தூர் வாழ்
கந்தனே எந்தநே ரந்துதி நந்தனே (வள்ளி)

சங்கரி மணாளன் பெற்ற குமாரா
மங்கை வள்ளி காந்தனே முருகா (சங்)

சேவலனே செந்தூர் வேலவனே குகா
காவலனே விச்வம் பூஜித்திடும் முருகா
சங்கரன் மகிழ்ந்திடும் பாலனே வேலனே
சீலனே லோலனே அநுகூலனே (வள்ளி)

---

## தேசிகதோடி - ஆதி

33. ஜாலமே செய்வதழ காகுமா—வடி
வேலா க்ருபாகர சீலா என்மே லிந்த (ஜால)
தாமதம் செய்யாம லென்னைக் காப்பாயே
காப்பாயே காப்பாயே

கண்ணெடுத்துப் பார்ப்பாயே
மாமயின்மீதி லேறிவந் தென்னைக்
காத்திடாமலே போய் வருமிந்த (ஜால)

கீர்த்திவீசுங் கந்தனே என் ஆண்டவா
ஆண்டவா ஆண்டவா
அரும்பழனி யாண்டவா
வார்த்திகங் கொண்டு வள்ளியைக் கண்டு
மாவினை யுண்டு வெருண்டது போல (ஜால)

முனிவருக் குபதேசித்த ஓங்காரா
ஓங்காரா ஓங்காரா
அதிவினய சிங்காரா
கனியென வெகு விரைவு டனந்த
வனிதையைக் கொண்ட முருகையா இந்த (ஜால)

சங்கடஹ ரணவர தாயகா
தாயகா தாயகா
சத்யவிச்வ நாயகா
மங்கை வள்ளி தேவி சங்கையைத் தீர்த்திடச்
சென்றிலையோ அவ்வா றெந்தனைக் காத்திட (ஜால)

### (இந்துஸ்தான்) செஞ்சுருட்டி - ஏகம்

34. கோலமயில் வாகனனே
குன்றாக்குடிக் குமரா
குன்றாக்குடிக் குமரா குன்றாக்குடிக் குமரா
குன்றாக்குடிக் குமரா யானை சோதரா தயாபரா
ஆலமுண்டோன் மனங்களிக்குஞ்
சீலகுரு தேசிகனே (கோல)

அரனாருள் புதல்வா ஏமுருகையா
ஏமுருகைய உனை ஏமுருகையா
ஏமுருகைய உனைப் பரிவுடன் பணிந்தேன் நானையா
பரம தயாகர சுகுண
வரமருள்வாய் சுரவரனே (கோல)

திருமால் மருமகனே ஈராறு கையா
ஈராறு கையா உனை ஈராறுகையா
ஈராறு கையா உனை ஒருமனமுடன் துதித்தேனே
தருணி வள்ளியைக் கரம்பிடித்த
முருகையனே விச்வம் புகழ்க் (கோல)

---

### பக்ஷக் கண்ணிகள்

#### மாண்டு - ஆதி

35. குன்றக் குடியில்வாழும் குமரேசனே—எனை
வந்தாளும் இந்தவேளை குமரேசனே க

உயரும் மலைவசிக்கும் சுப்ரமண்யனே—எந்தன்
துயரம் தீர்க்கவருவாய் சுவாமி கண்யனே உ

சந்ததமும் உந்தனையே கந்தநாதனே—சுவாமி
சிந்தனைசெய் தேத்துமெனைக் காரும்போதனே ந

சக்திவடி வேலவனே முக்தி தருவாய்—நிதம்
பக்தியுடன் போற்றுமெனைக் காக்க வருவாய் ச

ஆறுமுகமான திருக் கோல நாதனே—எனைக்
காருமையா வேகமுடன் வேல நாதனே ௫

சீலமுள்ள பார்வதியின் வீரசேயனே—பெரும்
காலனை வதைத் தோன்பெற்ற மாசகாயனே ௬

சூரனையுங் கொன்றவடி வேல் முருகனே—நல்ல
தீரனே குன்றுக் குடிவாழ் மால் மருகனே ௭

வள்ளி மணவாள இங்கு வந்தருள் வாயே—எழில்
புள்ளி மயிலா வரங்கள் தந்தருள்வாயே ௮

ஆடி உந்தன் சந்நிதியை நாடிவந்தேனே—உனைப்
பாடிமனம் வாடிவந்தேன் தேவர் செந்தேனே ௯

கிள்ளை மொழிக்கனி யருந்தும் நேசனே—உந்தன்
பிள்ளைத் தமிழைமிக விரும்பு மீசனே ௧௦

பச்சைமயி லேறிவரும் பன்னிருகையா—எந்தன்
இச்சைதனைப் பூர்த்தி செய்வாய் என்முருகையா ௧௧

கீர்த்திபெறும் சீலமுள்ள கார்த்தி கேயனே—புகழ்
வார்த்தைக் கநுகூலமுள்ள நேர்த்தி நேயனே ௧௨

சரவணப் பொய்கை தனிலே வாழும் வேலவா—நீயும்
நறுமணத்தோ டெந்தனை யெந்நாளும் காருவா ௧௩

சமர்களெங்கும் ஜயமடைந்த ஷண்முகநாதா—வாழும்
அமரர்களின் பயங்கடைந்த விண்ணவர் நீதா ௧௪

காதல் கொண்ட வள்ளி யம்மை போற்று மெய்யனே-விச்வ
நாதன் கொண்ட பதந்தனையே யேற்கு மையனே. ௧௫

**சிந்துபைரவி - ஆதி - (பதம்)**

36. சேவலனே செந்தூர் வேலவனே
காவலனே கதிர் காவலனே கந்தா (சேவ)

மோடி செய்யாமலே ஓடிவந் தருள்புரி (சேவ)

நித்தம் உனைத்துதிக்கும் பக்தர் மனமகிழச் (சேவ)

நாடிதேடி உன தருளைக்
கூடி நீடிச்சுக முறவினிது (சேவ)

ஏழைநானிடு முறையே தேவனே இருசெவிமீ
தேறலையோ குமரனே (சேவ)

சிவகுமரா திருமுருகா
பவவினைகள் பறந்திடப் பரவசமுறச் (சேவ)

உலகம் மிகவும் புகழும் குருமணி
யுனையென் னகமே பரவும் படியருளிய (சேவ)

தேவர்களும் மூவர்களும் யாவர்களும்
சித்தமதித்து இனித்துக் களித்திடும் (சேவ)

சந்ததம்ம னங்குவிந்து நளினமா
யெந்தனைம் புலன்களோடு மருவியதிருச் (சேவ)

காத்துக் கடைக்கண் விழி பார்த்து அடியேன்குறை
தீர்த்துத் திருவருளை வார்த்துச் சேர்த்து நிதம் (சேவ)

நிதம் அசுரர்களை வதம்செய் குகன்திருப்
பதம் தனையேபல விதம் துதிக்குமெனக்
கிதம் தனையேசந் ததம் அருளிசாச்
வதம் திருவுளச்சம் மதம் புரியுந்திருச் (சேவ)

## வைராக்கியப் பதங்கள்

### காவடிச்சிந்து ('புள்ளிக்கலாபமயில்' - மெட்டு)

37. நீர்மேற்குமிழி போலிக் காயம் இதை
நம்பியிருப்பது அநியாயம் நம்பிக்
கொஞ்சி வளர்த்திடுவ தபாயம் நாளை
நமன்வதைக் காளாகாமல் நற்கதிக்குத் தேடு
ஓருபாயம் இது ஞாயம் க

வஞ்சனை யகற்றியறம் நாடு தீய
நஞ்சரைக் கண்டால் விலகியோடு இன்னும்
ஏழைமீது கருணைகொண்டாடு வீண்
சங்கை கொண்டு சிந்தை நொந்து ஜன்மம் பாழாகாமல்
வழி தேடு முக்தி கூடு உ

நாடு நகராண்டுமிக வேட்டை யாடிச்
சேகரித்து வைத்தாலு மோர்கோட்டை உனை
விட்டுவிலகுமோ பாபமூட்டை இனித்
தாமதம் செய்யாமல் விச்வ நாதனுரைப்படி
விடுகேட்டைக் கேளிப்பாட்டை. ந

---

### காம்போஜி - சாபு

38. மனமே மஹாமாயைக் குள்ளாகியே வீணாய்
மயங்குகிறாய் அநுதினமே—ஏபேதை (மன)

மனமறிந்தே மிகக் கருணையுடனீசன்
தனதன்பை யளித்துன்னைத் தயவுடன் கைதூக்க (மன)

மாயப்பிறவியீதே மண்டலந் தன்னில் மீதே
ஞாயமுங் கிடையாதே நானென் செய்வேனிப்போதே
காயம் நிலையில்லாதே கவலைக்கிடங் கொடாதே
தூய விச்வம் புகழும் துதியை மறந்திடாதே (மன)

**காபி - தேசாதி**

39. சஞ்சலத்தை விட்டு அகன்றிரு மனமே (சஞ்)
கொஞ்சியுனை யாதரிக்கப் பஞ்சநதீ சனிருக்கச் (சஞ்)

காலங்கலி யென்பதறி யாயோ நல்ல
காலம் வருமென்பதுவும் பொய்யோ ?
சீல குணசாலி யுனைஜாலம் செய்து சோதித்தநு
கூலமளித்தீசன் பரிபாலனத்தை யேற்றிருக்கச் (சஞ்)

மானமதையே நீ கைவிடாதே வீண்
கானமதால் நீசரைப் புகழாதே
தீனனென்றாலும் நீ சுயா தீனத்தை யிழந்திடாதே
நானுன்னைக் கைவிடே னென்று
மோனவிச்வ குருவே காக்கச். (சஞ்)

75570

...டிகள் நூ...